# Public Health Department

## Birth and Death Registration

Births, deaths and stillbirths must be registered at the place of occurrence of the event under the Registration of Births and Deaths Act (1969) and the Tamil Nadu Births and Deaths Registration Rules, 2000.

All births, still births and deaths must be reported to the Birth & Death Registrar within 21 days of their occurrence (Sections 8 and 9, Rule 2000 of the Births and Deaths Registration Act).

The following are responsible for providing information regarding birth / death in their premises / area to the birth and death registrar.

**Persons responsible for providing information on births and deaths**

(Rule 5 (1) and 5 (3) of Sections 8 and 9 of the Act)

| S.No | Places | Persons responsible for providing information |
|---|---|---|
| 1. | Home | The head of the household or his close relative who lives in the house. |
| 2. | Hospital | Medical officer in charge of the hospital |
| 3. | Prison | Prison Officer in charge. |
| 4. | Chathiram, Rest house, Lodging house | Person in charge of these places. |
| 5. | Public place | Concerned area Police Officer. |

As per the section 7(1) of Registration of Birth and Death Act 1969, the birth and death events are registered by the concerned division Sanitary Inspector in Greater Chennai Corporation.

**Late Registration (Section 13 / Rule 9)**

The events (births, deaths and stillbirths) which are not registered within 21 days after occurrence are considered as late registration (Section 8 (1), 2012 and Rule 5 (3).

**Procedure for registering events reported after 21 days**

| SI.No. | Timeline | Procedure |
|---|---|---|
| 1 | 21 days after but within 30 days | Application and required form to be submitted to birth and death registrar with late fees of Rs.100/- as per rule 9(1). |
| 2 | Over 30 days but within one year | Application and required form to be submitted to birth and death registrar with late fees of Rs.200/- as per rule 9(2). Registration can be done after approval of City Health Officer. |
| 3 | After one year | Application with order of the jurisdictional Revenue Divisional Officer for registration to be submitted to birth and death registrar with late fees of Rs.500/- as per rule 9(3). |

**Note:**

The Government of Tamil Nadu has exempted late fees for the births and deaths events occurring from 01.01.2020 to 31.12.2021.

**Inclusion of child's name**

It is the duty of the parent / guardian (in the absence of the child's parents) of the child to register the name in the birth register.**(Section 14 / Rule 10)**

- Within 12 months after birth, the name of the child can be included by providing written declaration with an application from the parents to the Birth and Death Registrar at free of charge.
- After 12 months and up to 15 years of birth, the child's name can be included by submitting by application with an affidavit and supporting documents to Birth and Death Registrar as mentioned below.
- The following documents should be submitted to include the child name in the birth certificate after 12 months of birth.
  - Application signed by the parent / guardian.
  - A copy of the birth certificate
  - ID proof of the parents and child
  - Notarized affidavit.
  - School certificate of the child (If Child more than 5 years of age)
- The Government of Tamil Nadu has relaxed the time limit for including name in the birth register beyond 15 years till 31.12.2024 (As per rule 10 (1) of Tamil Nadu Births and Deaths Registration Rules, 2000),
- Once child name is registered, it cannot be changed for any reason. Hence, parents should finalise the name of the child and then approach concerned Birth and Death Registrar to include the child name by submitting a declaration form at the corporation office or online in Chennai Corporation website.

**Issuance of birth / death certificates**

- Greater Chennai Corporation has computerized all the birth / death certificates from the year 1930.
- For the convenience of the public, birth and death certificates can be downloaded from the official website of Greater Chennai Corporation**.** **(www.chennaicorporation.gov.in)9**

**Procedure for correction in Birth / Death Certificate**

According to the Birth and Death Registration Act 1969, the applicant should submit an application along with necessary documents for correction in the birth / death certificate.

- As per the submitted documents, rules and field verification (if necessary) correction can be made in the certificate as well as connected original records by birth & death registrar.
- Corrected certificate can be downloaded from the Greater Chennai Corporation website.

# பொது சுகாதாரத் துறை

## பிறப்பு / இறப்பு பதிவு

பிறப்பையும் இறப்பையும் பதிவு செய்வது ஒவ்வொரு குடி மக்களின் கடமையாகும். பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை ஆகிய நிகழ்வுகளை நிகழ்ந்த இடத்திலேயே பிறப்பு இறப்பு பதிவுச்சட்டம் (1969) மற்றும் தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு விதிகள் 2000ன்படி கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும்.

பிறப்பு, இறந்து பிறந்தவை மற்றும் இறப்பு ஆகிய நிகழ்வுகள் குறித்த தகவலை அவை நிகழ்ந்த 21 நாட்களுக்குள் பதிவாளருக்குத் தெரிவிக்க வேண்டும் (பிறப்பு இறப்பு பதிவு சட்டபிரிவு 8 மற்றும் 9, விதி 2000).

பிறப்பு மற்றும் இறப்பு குறித்த நிகழ்வுகளை கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவர்கள் பிறப்பு இறப்பு பதிவாளரிடம் தகவல் அளிக்க வேண்டும்.

**பிறப்புகளையும் இறப்புகளையும் தகவல் அளிக்க கடமைப்பட்ட வர்கள்**

(சட்டப் பிரிவு 8 மற்றும் 9 விதி 5(1) மற்றும் 5(3))

| வ.எண் | நிகழுமிடம் | தகவல் கொடுக்க கடமைப்பட்ட நபர் |
|---|---|---|
| 1 | வீடு | குடும்பத் தலைவர் அல்லது வீட்டில் வாழும் அவரது நெருங்கிய உறவினர் |
| 2 | மருத்துவமனை | பொறுப்பு மருத்துவ அலுவலர் |
| 3 | சிறைச்சாலை | சிறைச்சாலை பொறுப்புடைய அலுவலர். |
| 4 | சத்திரம், விடுதி | இந்த இடங்களின் பொறுப்புடைய நபர் |
| 5 | பொது இடம் | அந்த பகுதிக்கான காவல் அதிகாரி. |

பெருநகர சென்னை மாநகராட்சியில் பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969 பிரிவு 7(1) யின் கீழ் அந்தந்த கோட்ட சுகாதார ஆய்வாளர்களால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யப்படுகிறது.

**காலந்தாழ்ந்த பதிவு (பிரிவு 13/விதி 9)**

காலந்தாழ்ந்த பதிவு என்பது யாதொரு பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்த நிகழ்வை குறித்துரைக்கப்பட்ட 21 நாட்களுக்கு பிறகு பதிவு செய்தல் ஆகும்.

**காலந்தாழ்ந்த பிறப்பு / இறப்பு நிகழ்வுகளை பதிவு செய்யும் முறை**

| வ.எண். | காலம் | பதிவு செய்யும் முறை |
|---|---|---|
| *1* | நிகழ்வுற்ற 21 தினங்களுக்கு பின் ஆனால் 30 தினங்களுக்குள். | விதி 9(1)ல் குறித்துரைக்கப்பட்டபடி கால தாமத கட்டணம் ரூ100/- செலுத்தி, விண்ணப்பித்து பிறப்பு / இறப்பு பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளலாம். |
| *2.* | நிகழ்வுற்ற 30 தினங்களுக்கு மேல் ஆனால் ஓராண்டிற்குள் | விதி 9(2)ன்படி குறித்துரைக்கப்பட்ட காலதாமத கட்டணம் ரூ200/- செலுத்தி பெருநகர சென்னை மாநகராட்சியில் மாநகர நல அலுவலர் அவர்களின் அனுமதியுடன் பதிவு செய்து |

| | | |
|---|---|---|
| | | கொள்ளலாம். |
| 3 | நிகழ்வுற்ற ஓராண்டிற்கு பின் | விதி 9(3)படி குறித்துரைக்கப்பட்ட காலதாமத கட்டணம் ரூ500/- செலுத்தி கோட்ட வருவாய் அலுவலர் / அப்பதவிக்கு குறையாத நிர்வாக நடுவரின் ஆணையின் பேரில் பதிவு செய்ய வேண்டும். நிர்வாக நடுவரின் ஆணையை விண்ணப்பத்துடன் இணைத்து அளிக்க வேண்டும். |

**குறிப்பு:**

தமிழ் நாடு அரசு 01.01.2020 முதல் 31.12.2021 வரை நிகழ்வுற்ற பிறப்பு / இறப்பு பதிவுகளுக்கான காலதாமத கட்டணத்திற்குவிலக்கு அளித்துள்ளது.

**குழந்தையின் பெயர் சேர்த்தல்**

குழந்தையின் பிறப்பு பதிவில் பெயரை பதிவு செய்வது குழந்தையின் பெற்றோர் அல்லது பெற்றோர் உயிருடன் இல்லாத நேர்வில் அக்குழந்தையின் பாதுகாப்பாளரின் கடமையாகும்.

**(பிரிவு 14 / விதி 10)**

- ஒரு குழந்தையின் பிறப்பு, பெயரின்றி பதிவு செய்யப்பட்டிருப்பின் அக்குழந்தையின் பிறப்பு பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 12 மாதத்திற்குள் குழந்தையின் பெற்றோர் அல்லது காப்பாளர் எழுத்து பூர்வமான உறுதிமொழியை சம்மந்தப்பட்ட பிறப்பு இறப்பு பதிவாளரிடம் அளித்து எவ்வித கட்டணமுமின்றி பதிவு செய்திடலாம்.
- குழந்தை பிறந்த நாளிலிருந்து 12 மாதங்களுக்குப்பின் 15 ஆண்டுகள் வரை பதிவு செய்ய விண்ணப்பத்துடன் கீழ்குறிப்பிட்டுள்ள ஆவணங்களை சமர்ப்பித்து பதிவு செய்து கொள்ளலாம்.
- குழந்தையின் பெயரை சேர்ப்பதற்கு கீழ்கண்ட ஆவணங்கள் அளிக்கப்பட வேண்டும்.
  - கையொப்பத்துடன் கூடிய பெற்றோர்/ பாதுகாவலர் விண்ணப்பம்,
  - குழந்தையின் பிறப்பு சான்று,
  - பெற்றோர் / பாதுகாவலர் அடையாள அட்டை ,
  - சான்றுரை படிவம் (Declaration form)
  - உறுதி மொழி பத்திரம் (Notarised Affidavit)
  - குழந்தையின் பள்ளிச்சான்று (பிறந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேல் குழந்தையின் பெயர் சேர்ப்பதற்கு)
- தற்போது தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு விதிகள் 2000 விதி 10(1) ன்படி வகுத்துரைக்கப்பட்ட 15 ஆண்டு கால அவகாசம் முடிந்த பின்பும் பெயர் பதிவு செய்யாத குழந்தைகளுக்கு, தமிழக அரசு விதியில் திருத்தம் செய்து 31-12-2024 வரை பெயர் பதிவு செய்திட அவகாசம் அளித்துள்ளது.
- ஒரு முறை குழந்தையின் பெயரை பதிவு செய்தபின் எக்காரணம் கொண்டும் மாற்ற இயலாது. எனவே குழந்தையின் பெயரை இறுதியாக முடிவு செய்த பின்

சம்மந்தப்பட்ட பிறப்பு இறப்பு பதிவாளரை அணுகி உறுதி மொழி படிவம் அளித்து பெயர் பதிவு செய்திடலாம்.

- குழந்தையின் பெயரினை மாற்றம் செய்யாமல் குழந்தையின் பெயருடன் குடும்பப் பெயர் சேர்ப்பது அல்லது நீக்குவது, முதல் எழுத்து (Initial) சேர்ப்பது அல்லது நீக்குவது போன்ற சிறு திருத்தங்களை மேற்கொள்ளலாம். இதற்காக பெற்றோர்/ பாதுகாவலரின் விண்ணப்பக்கடிதம், அடையாளஅட்டை, குழந்தையின்பள்ளிச்சான்று, உறுதிமொழி பத்திரம் (Notarised Affidavit). பாஸ்போர்ட், மற்றும் குடும்ப அட்டை ஆகியவை வழங்கப்பட வேண்டும்.

**<u>பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்குதல்</u>**

- பெருநகர சென்னை மாநகராட்சியில் 1930 ஆம் ஆண்டு முதல் அனைத்து பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.
- பொது மக்களின் வசதிக்காக,பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களை சென்னை மாநகராட்சியின் அதிகாரப் பூர்வமான இணையத்தளத்தில் (www.chennaicorporation.gov.in) இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**<u>பிறப்பு / இறப்பு சான்றிதழில் திருத்தம் செய்தல்</u>**

- பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம் 1969 ன் படி விண்ணப்பதாரர் பிறப்பு / இறப்பு சான்றிதழில் தேவைப்படும் திருத்தங்களுக்கான ஆவணங்களை சேர்த்து விண்ணப்பம் அளிக்க வேண்டும்.
- அளிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும், விதிகளின் அடிப்படையிலும் மற்றும் தேவைப்படின் கள ஆய்வின் அடிப்படையிலும் சான்றிதழிலும் அதனை சார்ந்த மூல ஆவணங்களிலும் திருத்தம் மேற்கொள்ளப்படும்.
- திருத்தப்பட்ட சான்றிதழ்களை சென்னை மாநகராட்சி இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.